பக்கங்கள்: 07

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 28 சனிக்கிழமை 12.07.2025 கதிர் 245

## இது ரகசியம் அல்ல!

என்பிபி ஆட்சிக்கு வருவதற்கு முன்னதாக மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் முக்கியமானது ஊழலற்ற நிர்வாகம், நேர்மையான அரசநிர்வாகம் ☞ 2

# ஆண்களுக்கு மட்டும் எப்படி வாய்ப்பு வழங்க முடியும்?

### தொடருந்து நிலைய அதிபர் பதவி விடயத்தில் பெண்கள் போர்க் கொடி தூக்கி வழக்கு தாக்கல்

இலங்கை தொடருந்து திணைக்களத்தின் தொடருந்து நிலைய அதிபர்கள் பதவிக்கு ஆண்கள் மாத்திரமே விண்ணப்பிக்கமுடியும்என குறிப்பிடுவது அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகும் என குற்றஞ்சாட்டி இரண்டு பெண்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணை செய்ய உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த மனு ஏ.எச்.எம்.டி. நவாஸ், பிரியந்த பெர்னாண்டோ மற்றும் சம்பத் விஜேரத்ன ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நீதிமன்றில் முற்பட்ட மனுதாரர்கள், தொடருந்துதிணைக்களத்தின்தொடருந்து நிலைய அதிபர்கள் பதவிக்கு ஆண் விண்ணப்பதாரர்களை கோருவது பெண்கள் மீதான சமத்துவம் மற்றும் பாலின பாகுபாட்டை பாதிக்கிறது. இது அரசமைப்புக்கு முரணான ஒரு செயலாகும் ☞ 2

## அமெரிக்காவுடன் தொடர் பேச்சு இதுவொரு பூகோள நெருக்கடி

### நாடாளுமன்றில் தொழில் அமைச்சர் விளக்கம்

அமெரிக்காவுடன் வர்த்தக இருதரப்பு ஒப்பந்தத்தை ஓகஸ்ட் முதலாம் திகதிக்குள் கைச்சாத்திடாவிடின் 30 சதவீத பரஸ்பர தீர்வை வரி வீதம் அமுல்படுத்தப்படும். விதிக்கப்பட்டுள்ள 30 சதவீத வரிவீதத்தை குறைத்துக்கொள்வதற்கு ☞ 6

## தெற்காசியாவில் ரஷ்ய நாட்டின் நம்பத் தகுந்த பங்காளி இலங்கை

### அந்நாட்டு அயலுறவுத்துறை அமைச்சர் அறிவிப்பு இரு நாடுகளின் உறவைப் பலப்படுத்தவும் விருப்பம்

தெற்காசியப் பிராந்தியத்தில் ரஷ்யாவின் நம்பத்தகுந்த பங்காளி நாடாக இலங்கை திகழ்வதாகவும், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால வரலாற்றுத் தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவதற்குத்தாம்தயாராகஇருக்கின்றனர் எனவும் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் செர்கே லவ்ரோ உறுதியளித்துள்ளார்.

மலேசியாவின் கோலாலம்பூர் நகரில் ☞ 6

# போர்க் குற்றங்களுக்கும் இனவழிப்புக்கும் செம்மணி எலும்புகள் தெளிவான ஆதாரம்

### தமிழ் அரசுக் கட்சி அரசுத் தலைவருக்கு கடிதம்

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுகள் மற்றும் வடக்கு, கிழக்குத் தமிழர் பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட வேறு பல மனிதப் புதைகுழிகளையும் சேர்த்துக்கருத்திலெடுக்கும்போது, இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க் குற்றங்களையும், இனவழிப்பு முயற்சிகளையும்வெளிப்படுத்தும் தெளிவான ஆதாரங்கள் என்று இலங்கை அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்கவுக்குத் தெளிவுபடுத்தியுள்ளதுஇலங்கைத் தமிழ் அரசுக் கட்சி.

கட்சித் தலைவர் சிவஞானமும், பொதுச்செயலாளர் சுமந்திரனும் கையெழுத்திட்டு செம்மணி மனிதப்புதைகுழி விசாரணையில் உண்மையைக் கண்டறிதல், ☞ 2

## மனதை உருக்கிய சம்பவம்



விபத்தில் இறந்த மகனின் உடலுக்கு அதே விபத்தில் காயமடைந்து படுக்கையில் இருக்கும் தந்தை வைத்தியசாலையிலேயே இறுதி அஞ்சலி செலுத்திய சம்பவம் அனைவரது மனதையும் உருக்கியுள்ளது.

மன்னார்-நானாட்டான் பிரதான வீதி, நறுவிலிக்குளம்பகுதியில்வியாழக்கிழமைமாலை இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த சிறுவனின் உடலையே அவனது தந்தை இறிதியாகப் பார்த்துத் தடவி அஞ்சலி செலுத்தினார். இந்த ஒளிப்படம் வெளியானதைத் தொடர்ந்து அது அனைவர் மனதையும் உருக்கியுள்ளது.

நறுவிலிக்குளம் பகுதியில் இருந்து மோட்டார் சைக்கிளில் தந்தை ,தாய், மகன் மற்றும் மகள் ஆகிய நான்கு பேரும் வியாழக்கிழமை மாலை நானாட்டான் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது நானாட்டான் பிரதான வீதியூடாக மன்னார் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பட்டா ரக வாகனம் மோட்டார் சைக்கிளுடன் மோதி ☞ 6

## அமெரிக்காவின் 30% வரியைக் குறைப்பதற்கு வெள்ளை மாளிகையுடன் நேரில் பேசுங்கள்

### ஆளும்தரப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் அறிவுரை

அமெரிக்காவின் பரஸ்பர தீர்வை வரியை 44வீதத்திலிருந்து 30 வீதமாக குறைந்தமை நல்ல விடயம். என்றாலும், எங்களுடன் ஏற்றுமதி போட்டியாளர்களாக இருந்து வரும் நாடுகளுடன் ஒப்பிடும்போது நாம் பெற்ற வரிச் சலுகை நியாயமானது தானா எனக் கேட்கிறோம். அத்துடன் வெள்ளைமாளிகையுடன்நேரடியான தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு இதனைஇன்னும்குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பினார்

நாடாளுமன்றத்தில்நேற்று விசேடகூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டு ஏற்றுமதிகளில் 26.4வீத ☞ 2

## அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மலேசியாவில்

மலேசியாவுக்கு உத்தியோகபூர்வமாகச் சென்றுள்ள அயலுறவுத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் அந்த நாட்டுப் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வர் பின் இப்ராஹிமை சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பு வியாழக்கிழமை மலேசிய பிரதமரின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்புக் குறித்து அயலுறவுத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்ததாவது:

இந்த இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்து விவாதிக்கும் மரியாதையும் பாக்கியமும் எனக்குக் கிடைத்தது. இலங்கைக்கும் மலேசியாவுக்கும் இடையிலான நீண்டகால இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், பரஸ்பர ஆர்வமுள்ள விடயங்கள் குறித்து நாங்கள் ஒரு பயனுள்ள கலந்துரையாடலை ☞ 6

## வவுனியா கூமாங்குளத்தில் நேற்றிரவு பெரும் பதற்றம்

### ஒருவர் உயிரிழந்ததால் பொதுமக்கள் பொலிஸாருடன் முறுகல்

வவுனியா கூமாங்குளத்தில் பொதுமக்களுக்கு பொலிஸாருக்கும் இடையில் நேற்றிரவு முறுகல் நிலை ஏற்பட்டது.

வீதியோரமாக மோட்டார் சைக்கிள் பயணி ஒருவர் உயிரிழந்திருந்தமையும்அவர்அருகே பொலிஸார் அணியும் பெயர் பட்டி ஒன்று கண்டெடுக்கப்பட்டமையுமே இந்தப் பதற்றத்திற்குக் காரணம்.

உயிரிழந்தவரைப் பொலிஸார் துரத்தி வந்தபோது அவர் விபத்துக்குள்ளாகி இறந்தார் என்றும் துரத்தி வந்த பொலிஸாரே ☞ 6

## அமெ. வரி விடயத்தில் எதிர்க் கட்சிகள் செய்வது மிகக் கீழ்த்தரமான அரசியல்

### கொந்தளித்த அமைச்சர் பிமல்

நாங்கள் ஆட்சியில் இருந்தால் அமெரிக்க அரசுத் தலைவர்டொனால்ட்ட்ரம்பின் வீட்டுச் சென்று அவருடன் தேநீர் அருந்திக் கொண்டு பேச்சு நடத்தி தீர்வை வரியை குறைத்திருப்போம் என்ற நிலைப்பாட்டில் இருந்துக் கொண்டு எதிர்க்கட்சியினர் பேசுகிறார்கள். பூகோள நெருக்கடிகளையும் குறுகிய அரசியலுக்காக பயன் படுத்துவது கீழ்த்தரமானது என்று சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றைய அமர்வின்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ☞ 2

## இனி இது .....

என்பது. ஆனால், அதெல்லாம் எதுவுமில்லை, வழக்கமான ஆட்சிகளுக்கும் இந்த ஆடு;சிக்கும் இடையே எந்தவேறுபாடும் இல்லை என்பதை யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள அரச நிர்வாக அதிகாரிகள் இடமாற்றம் மிகத் தெளிவாக நிரூபித்திருக்கிறது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 8 பிரதேச செயலகங்களிற்கு புதிய செயலாளர்களை நியமிக்கும்படி பரிந்துரைத்து யாழ். மாவட்டச் செயலர் பிரதீபன் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு ஒரு பட்டியலை அனுப்பி வைத்துள்ளார். (அவர் அனுப்பிய பட்டியல் அமைச்சால் அனுப்பப்பட்ட பட்டியலாகத் திரிக்கப்பட்டு செய்திகள் பரப்பப்படுவது வேறு கதை)

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 8 பிரதேச செயலார்கள் புதிதாக நியமனம் செய்யப்படுகின்றனர்.

இதற்கமைய கோப்பாய் பிரதேச செயலாளராக தற்போதைய கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர் மஞ்சுளாதேவி நியமிக்கப்பட்டவுள்ளார். இவர் நீண்ட காலமாக யாழ்ப்பாணத்திலேயே பணியாற்றி வந்தார். அவரது முதல் நியமனத்தில் இருந்து கிட்டத்தட்ட 20 வருடங்களுக்கு மேல் யாழ்ப்பாணத்திலேயே பணியாற்றினார். 2025தான் அவருக்கு வெளிமாவட்டத்திற்கு மாற்றம் வழங்கப்பட்டது. உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில்உள்ளஒருபிரதேசசெயலகத்திற்கு அவர் மாற்றப்பட்டார். ஆனால், மூன்றே மாதங்களுக்குள் அவருக்கு மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு மாற்றம் வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

உடுவில் பிரதேச செயலாளராக பிறேமினியும், பருத்தித்துறை பிரதேச செயலாளராக திருலிங்கநாதனும், சாவகச்சேரி பிரதேச செயலாளராக சத்தியசோதியும், நெடுந்தீவு பிரதேசசெயலாளராக பிரபாகரனும் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளராக பிரபாகரமூர்த்தியும், மருதங்கேணி பிரதேச செயலாளராக உசாவும், வேலணை பிரதேச செயலாளராக அகிலனும் யாழ்ப்பாணம் மாவட்ட

மேலதிகச் செயலராக (காணி) பதவியில் தற்போதைய உடுவில் பிரதேச செயலாளர் ஜெயகரன் நியமிக்கப்படுவதோடு சமுர்த்திப் பணிப்பாளராக ஸ்ரீவர்ணனும் நியமிக்கப்படுவதற்காகச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சிபாரிசு பெரும்பாலும் உயர் பதவியில் உள்ளவர்களின் விருப்பம் மற்றும் தேவைகளுக்காகவேமேற்கொள்ளப்பட்டுள்ளது என்கிற குற்றச்சாட்டுக்களும் பரவலாக உள்ளன. இதில் கொடுமை என்னவென்றால், ஆளும்தரப்பில் யாழ்ப்பாணத்திற்குப் பொறுப்பாக உள்ள அமைச்சருக்கு நிர்வாகம் தொடர்பில் அடியும் தெரியாது நுனியும் தெரியாது, விளங்காது என்பதால் உயர் பதவியில் இருப்பவர்கள் தமது விருப்பத்திற்கு ஆடுகின்றனர். இந்தப் பதவி மாற்றப் பரிந்துரைகள் தொடர்பில் ஆளும்தரப்பு யாழ். மாவட்நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கேகூட கடும் அதிருப்தி இருக்கின்றது என்று அறிய முடிகிறது. ஆனாலும், அவர்களுக்கு கட்சிக்குள் எந்தச் செல்வாக்கும் கிடையாது என்பதாலும், கட்சியின்செல்வாக்கால்மட்டுமே அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கிள்ளுக்கீரைகள் என்று கணிக்கப்படுவதாலும் அவர்களின் கருத்துக்கள் எடுபடுவதில்லை. யாழ்ப்பாண மக்களுக்காக இங்குள்ள கள நிலவரம் தெரியாத அமைச்சரே எல்லா முடிவுகளையும் எடுப்பதால் அவரைத் தாஜா செய்து, மண்டையைக் கழுவிவிட்டால் ஊழல் அதிகாரிகளால் தாம் விரும்பியதைச் செய்து அரச நிர்வாகத்தைத் தொடர்ந்தும் ஊழலோடு நடத்த முடிகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## போர்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் நீதியின் அவசியம்' - என்ற தலைப்பில் அனுப்பி வைத்துள்ள இந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: .

தற்போது நடைபெற்று வரும் செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வாய்வுகள் தொடர்பில் எம் ஆழ்ந்த கரிசனையை வெளிக்காட்ட இலங்கைத்தமிழ்ரசுக்கட்சியின் சார்பில் இக்கடிதத்தை எழுதுகின்றோம். உண்மையை வெளிக்கொணரவும், தடயவியல் விசாரணைகளில் சர்வதேச ரீதியில் தரநிலைகளை பின்பற்றுவதை உறுதி செய்யவும், குற்றவாளிகளை நீதிக்கு முன்னிறுத்தவும் அவசரமானதும், தீர்மானமானதுமான நடவடிக்கைகளை எடுக்குமாறுஇக்கடித்தத்தினூடுகேட்டுக்கொள்ள விழைகிறோம்.

இலங்கையில் 1990களின் நடுப்பகுதி வரை தொடர்ந்த வலுக்கட்டாயமான காணாமற் போக்கல்கள் மற்றும் நீதிக்குப் புறம்பான கொலைகளின் நீண்ட, இன்றும் தீர்க்கப்படாத வரலாற்றையே செம்மணி பிரதிபலிக்கின்றது. 1998இல், தமிழ்ப் பள்ளி மாணவி கிருசாந்தி குமாரசாமி மற்றும் அவருடைய குடும்பத்தினரை பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்ததாகத் தீர்க்கப்பட்ட லான்ஸ் கார்ப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, தனது தண்டனை விசாரணையின் போது, குமாரசாமி குடும்பம் புதைக்கப்பட்ட இடத்தில் 300 - 400 தமிழ் பொது மக்கள் புதைக்கப்பட்டிருப்பதை நீதிமன்றில் வெளிப்படுத்தியிருந்தார்.

இந்தச்சாட்சியின் அடிப்படையில் 1999இல் அகழ்வு வேலைகள் மேற்கொள்ளப்பட்ட போது, 15 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதில் இரண்டு எலும்புக்கூடுகள் 1996இல் காணாமலாக்கப்பட்டவர்களது என உறுதி செய்யப்பட்டது. இவர்கள் உடல் ரீதியாகத் தாக்கப்பட்டு, கொலை செய்யபட்டதை தடய ஆதாரங்கள் உறுதி செய்திருந்த போதும், வழக்குகள் நடுநிலையிலேயே நின்றுவிட்டன. இதுவரை நீதியும் வழங்கப்படவில்லை.

2025 ஆரம்பத்தில், யாழ்ப்பாணத்தின் வட பகுதியில் அமைந்த செம்மணி – அரியாலை – சித்துப்பாத்திஇந்துமயானத்தைமறுசீரமைக்கும் பணிகளின் போது மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதையடுத்து யாழ். நீதிவான் நீதிமன்றம் அந்த இடத்தை அதிகாரபூர்வமாக ஒரு மனித புதைகுழியாக அறிவித்து, நீதித்துறையின் மேற்பார்வையில் அகழ்வுகளை மேற்கொள்ள உத்தரவிட்டது. இன்றுவரை, இரண்டு கட்டங்களாக நடந்து வரும் அகழ்வுப் பணிகளில் குழந்தைகளும் உட்பட சுமார் 65 எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்த மனித எச்சங்களோடு பள்ளிப்பை, பொம்மை, வளையல்கள், காலணிகள் மற்றும் உடைத் துணுக்குகள் போன்ற தனி உடமைகளும்சேர்த்தேமீட்கப்பட்டிருக்கின்றன. அனைத்து எலும்புக்கூடுகளும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் தடய ஆய்வுகளுக்காக பேணப்பட்டு வருகின்றன.

இந்த அகழ்வுகள், வடக்கு, கிழக்கு தமிழர் பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட வேறும் பல கூட்டப்புதைகுழிகளையும் சேர்த்துக் கருத்தில் எடுக்கும்போது, இலங்கையில் தமிழர்களுக்கு எதிராகஇழைக்கப்பட்டபோர்க்குற்றங்களையும், இனவழிப்புமுயற்சிகளையும்வெளிப்படுத்தும் தெளிவான ஆதாரங்களாகும்.

(இலங்கை அரசானது தனது) இந்தத் தமிழர் விரோத கொடும் வரலாற்றை முழுமையாக ஏற்றுக்கொள்வது அவசியம். மாறும் நீதி செயல்முறையின் அடிப்படையாக உண்மைக்கான தேடல் அமைய வேண்டும். 2009இல் போர் முடிவடைந்த பிறகு பதினாறாண்டுகளுக்கு மேல் கடந்தும் நூற்றுக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் இன்னும் பதில்களைத் தேடியலைகின்றனர். இந்த குடும்பங்கள் தங்கள் காணாமல்போன உறவுகளின் நிலை குறித்து பதில்மறுக்க முடியாத கேள்விகளை எழுப்புகின்றனர். அடுத்தடுத்தஅரசாங்கங்களின்தொடர்மௌனம் வெறும் அரசியல் தோல்வி மட்டுமல்ல, தீவிரமானதார்மீகத்தவறும்கூட.உண்மையை அறியாதுகடக்கும்ஒவ்வொருஆண்டும்போரின் வடுக்களில் இருந்துநாடுகுணமடைவதையும், தொக்கு நிற்கும் கேள்விகளின் முடிவையும் தள்ளிப் போட்டுக் கொண்டிருக்கின்றது.

1999இல் அகழப்பட்ட பதினைந்து உடல் எச்சங்களும், இன்று அகழப்பட்டுக் கொண்டிருக்கும் எலும்புக்கூடுகளும் ஒரே குற்றவியல் சூழலுடன் தொடர்புபட்டவை. இருப்பினும், அன்றைய அகழ்தலைக் குறித்த கொழும்பு நீதிவான் நீதிமன்றில் இருக்கும் முடிவுறா வழக்கானது இன்றைய விசாரணைகளுடன் முறையாக இணைக்கப் படவில்லை. இவை இப்போது ஒரே குற்றவியல் நடவடிக்கையின் பகுதிகளாகக் கருதப்பட வேண்டும். இரு விசாரணைகளையும் ஒருங்கிணைத்தால்தான் தக்க பொறுப்புக் கூறல் ஏற்பட முடியும்.

இலங்கையின் குறைந்த உள்நாட்டு தடய ஆய்வுத் திறனும், முன்னைய புதைகுழி விசாரணைகளை நீதித்துறை வெளிப்படைத்தன்மையின்றிக் கையாண்ட வரலாறுகளும் நம்பகமான சர்வதேச மேற்பார்வையையும், தெளிவான ஒளிவுமறைவில்லாத விசாரணை நடைமுறைகளையும் அவசியமாக்குகின்றன. காவல் வரிசை மிகச்சரியாக ஆவணப்படுத்தப்பட வேண்டும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற சுயாதீன தடய ஆய்வு நிபுணர்கள் அகழ்தல், அடையாளம் காணல் மற்றும் பகுப்பாய்வு என்பவற்றை மேற்பார்வையிட வேண்டும்.

இடைக்கால மற்றும் இறுதி அறிக்கைகள் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், சிவில் சமூகம், சர்வதேசஅவதானிப்பாளர்கள்மற்றும்பொதுமக்களுக்கு வாசனைக்காக வெளிப்படையாக பிரசுரிக்கப்படவேண்டும். 1999இல் அகழப்பட்ட பதினைந்து உடல்கள் பகுப்பாய்வுக்காக க்ளாஸ்கோ பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டன எனத் தெரியவந்துள்ளது.

இதுவரை, அடுத்தடுத்து வந்த இலங்கை அரசாங்கங்கள் எவையும் அந்த பூதவுடல்களைதாய்நாட்டுக்குத்திருப்பியெடுக்க, பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண, அல்லது முறையான இறுதிச் சடங்குகளை ஏற்படுத்த எந்தவொரு பொருத்தமான நடவடிக்கையும்எடுத்ததில்லை. அந்த உடல்கள் அவசரமாக இலங்கைக்கு திருப்பியனுப்பப்பட வேண்டும். இவற்றை சர்வதேச கண்காணிப்பு நடைமுறைகளைஇயக்கி, இன்றுசெய்யப்படும் செம்மணி அகழ்வுகளோடு இணைத்து விசாரணை செய்தால் மட்டுமே ஓர் ஒருங்கிணைந்த, தெளிவான உண்மைத் தேடல் செயல்முறையொன்று தோன்றலாம்.

செம்மணி நிலம் மீண்டும் பேசுகின்றது. குழந்தைகள் உட்பட நாற்பது எலும்புக்கூடுகள், அவர்களின் தனிப்பட்ட பொருள்களுடன் வெளிப்பட்டுள்ளன. இது அவர்கள் படைத்துறை சாராத சிவில் மக்கள் என்பதையும், நிரபராதிகள் என்பதையும் வேதனையுடன் உறுதிப்படுத்துகின்றது. இப்படிப்பட்டவர்கள் புதைந்திருக்க, குற்றவாளிகளோ நாட்டில் சுதந்திரமாக உலவுகின்றனர். உறுதியான சட்ட நடவடிக்கை இல்லாமல் (அரசின்) நல்லிணக்கத் தோரணைப் பேச்சுக்கள் வெறுமையாகவே ஒலிக்கின்றன.

எனவே, பின்வரும் நடவடிக்கைகளை தாமதமின்றி முன்னெடுக்குமாறு அரசுத் தலைவர்யாக உங்களை மரியாதையுடனும், உறுதியுடனும் நாம் கேட்டுக்கொள்கிறோம்:-

1. 1999 மற்றும் 2025 புதைகுழி அகழ்வுகளையும், அவை தொடர்பான விசாரணைகளையும், சட்ட வழக்குகளையும், கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றங்களின் கீழ், ஒரே நீதிமன்ற மற்றும் தடயஆய்வுவிசாரணையாகஒருங்கிணைக்க வேண்டும்.

2. விசாரணையின் அனைத்து நிலைகளையும் மேற்பார்வை செய்ய, சுயாதீனமான, சர்வதேச தடய ஆய்வு நிபுணர்களை ஈடுபடுத்தி, தடய ஆய்வின் உண்மைத்தன்மையையும், பொதுமக்களின் நம்பிக்கையையும் உறுதி செய்யவேண்டும்.

3. இடைக்கால மற்றும் இறுதி தடய ஆய்வு அறிக்கைகள், பரம்பரையலகு விவரங்கள் மற்றும் ஆள் அடையாளம் காணல் முடிவுகள் அனைத்தையும் பொதுமக்களுக்கு வெளியிட்டு, பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள், சிவில் சமூகம் மற்றும் சர்வதேச அவதானிப்பாளர்கள் ஆகியோருக்கு அவற்றை இலகுவாகப் பெற்றுக்கொள்ள ஆவனசெய்ய வேண்டும்.

4. தற்போது கிளாஸ்கோவில் இருப்பதாக நம்பப்படும் 1999இல் தோண்டியெடுக்கப்பட்ட சடலங்களை உடனடியாக மீளப்பெற்று, அவற்றை மேற்சொன்ன நடைமுறைகளின் கீழ் ஒரே விசாரணையின் கீழ் இணைத்து ஆய்வு செய்து, கூடிய விரைவில் அவற்றை குடும்பங்களிடம் சேர்க்க உரிய செய்ய வேண்டும்.

5. தற்போதைய அகழ்வுகள் சர்வதேச நியமங்கள் படி முழுமையடைய நிதி மற்றும் இதர வளங்களை அதிகரிக்க வேண்டும். நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இன்னும் காணாமல்போன தம் உறவுகளைத் தேடி வருகின்றனர்.

உண்மை மற்றும் பொறுப்புக் கூறல் இல்லாத நல்லிணக்கம் போலித் தோற்றம் மட்டுமே. இந்தக் கொடூரமான குற்றங்களை இழைத்தவர்களுக்கு எதிராக குற்ற வழக்குத் தொடருதல் நடவடிக்கைகளை மேற்கொள்வது தேசிய நல்லிணக்கத்துக்கு அத்தியாவசியமானதாகும்.

இந்த நடவடிக்கைகள் இலங்கையின் தார்மீக மற்றும் சட்டப் பொறுப்புகளை நிறைவேற்றவும், உண்மைமற்றும்நீதிக்கான நம்பகமான பாதையை உருவாக்கவும் அவசியமானவை. இந்த நடவடிக்கைகளை எளிதாக்குவதிலும், அவற்றின் காலமுறையான செயலாக்கத்தை உறுதி செய்வதிலும், எங்கள் ஆதரவைத் தர நாம் என்றும் தயாராகவே உள்ளோம்' என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆண்களுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என கூறினர்.

மனுதாரர்கள் சார்பில் நீதிமன்றில் ஆஜரான சட்டத்தரணி நுவான் போபகே, தொடருந்துவே திணைக்களத்தினால் ஜூன் மாதம் வர்த்தமானி ஒன்று வெளியிடப்பட்டது. அந்த வர்த்தமானியில் தொடருந்து நிலைய அதிபர்கள் பதவிக்கு 106 வெற்றிடங்கள் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் இந்த பதவிகளுக்கு ஆண்கள் மாத்திரமே விண்ணப்பிக்கமுடியும்எனவும்தொடருந்துவே திணைக்களம்குறிப்பிட்டுள்ளதுஎனகூறினார்.

இதனை கருத்தில் கொண்ட நீதவான் மனுவை விசாரணை செய்ய அனுமதி வழங்கியுள்ளதுடன் இந்த வழக்கு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 27 ஆம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்எனஉத்தரவிட்டுள்ளார்.

## அமெரிக்காவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்களிப்பைப் பெற்றுத் தரும் ஏற்றுமதி தலமாக அமெரிக்கா திகழ்ந்து வருகிறது. ஆடைத்துறையில் 60வீதம் ஏற்றுமதி தலமாகவும் அமெரிக்கா நாடே இருந்து வருகிறது. தீர்வை வரியை 44வீதத்திலிருந்து 30 வீதமாக குறைந்தமை நல்லதொரு விடயம். என்றாலும், எங்களுடன் ஏற்றுமதி போட்டியாளர்களாகஇருந்துவரும்நாடுகளுடன் ஒப்பிடும்போது நாம் பெற்ற வரிச் சலுகை நியாயமானது தானா என்பது குறித்தும் நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

ஜப்பான் 25வீதம் , மால்டோவா 25வீதம் , புரூணை 25வீதம் , தென் கொரியா மற்றும் கஸகஸ்தான் 25வீதம் , இந்தியா 26வீதம் என்ற வகையில் இந்நாடுகள் தமது தீர்வை வரிகளைக் குறைத்துக் கொண்டுள்ளன. நாம் இந்தியா பங்களாதேஷ் போன்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அடுத்த 3 வாரங்களுக்குள் நாம் ஆழமான இராஜதந்திர தலையீட்டை மேற்கொண்டே ஆக வேண்டும். நாம் வெள்ளை மாளிகையுடன் நேரடியான தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு, இந்த வரிச் சலுகைகளை இன்னும் குறைந்த மட்டத்தில் பெற வேண்டும்.

நாட்டிற்கு சிறந்த இணக்கப்பாட்டை பெறுவதற்கு, கட்சிபேதமின்றிஐக்கியமக்கள்சக்தி நாங்கள் எமது ஒத்துழைப்பைப் பெற்றுத் தருவோம். இந்தவரிகளால்நாட்டிற்குஏற்படும்பாதிப்புகளை இல்லாமலாக்க வேண்டும் என்றார் .

## அமெ. வரி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக்க ஆகியோர் அமெரிக்காவினால் விதிக்கப்பட்டுள்ள 30 சதவீத பரஸ்பர தீர்வை வரி தொடர்பில் விடயங்களை முன்வைத்து, ஆளும்தரப்பு இவ்விடயத்தில் துரிதமாகச் செயற்படவில்லை என்று குறிப்பிட்டனர்..

.இதன்போது எழுந்து உரையாற்றிய சபை முதல்வர் பிமல்ரத்நாயக்க, அமெரிக்காவினால் விதிக்கப்பட்டதீர்வைவரிதொடர்பில்அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்து வினைத்திறனாக செயற்பட்டுள்ளது. இதன் பிரதிபலனாகவே 30 சதவீதமாக வரி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பாராட்டாவிடினும், குறுகிய அரசியல் நோக்கத்துக்காக குற்றச்சாட்டுக்களை முன்வைக்காமல் இருக்க வேண்டும்.

பூகோளகாரணிகள் அனைத்தையும் தமது அரசியல் தேவைக்காக பயன்படுத்திக் கொள்ள கூடாது. பிரித்தானியா இலங்கைக்கு விசேட வரிச்சலுகையை வழங்கியுள்ளது. பூகோள காரணிகள் மாற்றமடைய கூடியது என்பதை எதிர்க்கட்சிகள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

நாங்கள் ஆட்சியில் இருந்தால் அமெரிக்க அரசுத் தலைவர் டொனால்ட் ட்ரம்பின் வீட்டுச் சென்று அவருடன் தேநீர் அருந்திக் கொண்டு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு தீர்வை வரியை குறைத்திருப்போம் என்ற நிலைப்பாட்டில் இருந்துக் கொண்டு எதிர்க்கட்சியினர் பேசுகிறார்கள். பூகோள நெருக்கடிகளையும் குறுகிய அரசியலுக்காக பயன்படுத்துவது கீழ்த்தரமானது என்றார்.

# சாதாரண தரப் பரீட்சையில் 8,500 பேர் ஒரு பாடத்தில்கூட சித்திபெறவில்லை

கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சை பெறுபேறுகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நள்ளிரவு வெளியிடப்பட்டன. அதற்கமைய இம்முறை 13 392 பேர் 9 பாடங்களிலும் ஏ சித்தியைப் பெற்றுள்ளனர். அதேவேளை சுமார் 2 சதவீதமானோர், அதாவது 8,500 பேர் எந்தவொரு பாடத்திலும் சித்தி பெறவில்லை எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பரீட்சை திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

மார்ச் 17 முதல் 27தி வரை 3664 பரீட்சை மத்திய நிலையங்களில் கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சைகள் இடம்பெற்றன. 398,182 பரீட்சாத்திகள் பாடசாலை ஊடாகவும், 75,965 பரீட்சாத்திகள் தனிப்பட்ட ரீதியிலும் பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்தனர். விண்ணப்பித்திருந்த 474,147 பரீட்சாத்திகளில் 375,244 பேர் பாடசாலை ஊடாகவும், 49 908 பேர் தனிப்பட்ட ரீதியிலும் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். அதற்கமைய ஒட்டுமொத்தமாக 425,152 பேர் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

இவர்களில் 237 026 பரீட்சாத்திகள் உயர்தரக் கல்வியை தொடர்வதற்கு தகுதி பெற்றுள்ளனர். இது 73.45 சதவீதமாகும். 13 392 பேர் 9 பாடங்களிலும் ஏ சித்தியைப் பெற்றுள்ளனர். இது 4.15 சதவீதமாகும். மேல் மாகாணத்தில் 74 சதவீதமானோரும், மத்திய மாகாணத்தில் 73 சதவீதமானோரும், தென் மாகாணத்தில் 75 சதவீதமானோரும், வட மாகாணத்தில் 69 சதவீதமானோரும், கிழக்கு மாகாணத்தில் 74 சதவீதமானோரும், வடமேல் மாகாணத்தில் 71 சதவீதமானோரும், வடமத்திய மாகாணத்தில் 70 சதவீதமானோரும், ஊவா மாகாணத்தில்73சதவீதமானோரும்மற்றும்சப்ரகமுவ மாகாணத்தில் 73 சதவீதமானோரும் உயர்தரக் கல்வியை தொடர்வதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

ஆங்கில பாடத்தில் 73 சதவீதமானோரும், விஞ்ஞான பாடத்தில் 72 சதவீதமானோரும், கணித பாடத்தில் 69 சதவீதமானோரும் சித்தியடைந்துள்ளனர். எதிர்வரும் 14ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை பெறுபேறுகள் மீள் பரிசீலனைக்காக விண்ணப்பிக்க முடியும். 2 சதவீதமானோர் எந்தவொரு பாடத்திலும் சித்தி பெறவில்லை. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெறுபேறுகளில் பாரியளவில் முன்னேற்றம் இல்லை.

இவ்வாண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைகள் நவம்பர் 10ஆம் திகதி முதல் டிசம்பர் 5ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன. அதேவேளை இவ்வாண்டுக்கான சாதாரண தர பரீட்சைகளை 2026 பெப்ரவரியில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டிலிருந்து பரீட்சைகளை உரிய மாதங்களில் நடத்துவதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றோம் என்றார்.

# மேர்வினுக்கு எதிரான வழக்கு ஜூலை 28க்கு ஒத்திவைப்பு

கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்கு போலி ஆவணங்களை தயாரித்து பண மோசடியில் ஈடுபட்டமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு ஜூலை 28 விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

மேர்வின் சில்வா, 2010 மார்ச் 31 முதல் 2012 மார்ச் 31 வரையான காலப்பகுதியில் கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்குப் போலி ஆவணங்களைத் தயாரித்துப் பண மோசடியில் ஈடுபட்டனர் என்று இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று நீதிமன்றில் அழைக்கப்பட்டபோது பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா நீதிமன்றில் இருந்தார்.

இந்த வழக்கு தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வரும் நீதிபதி விடுமுறையில் உள்ளதால் இந்த வழக்கு ஜூலை 28 மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என நீதிமன்றம் அறிவித்தது.

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்கு போலி ஆவணங்களை தயாரித்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் பத்தரமுல்லை பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து கடந்த மார்ச் மாதம் 05ஆம் திகதி குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 03 ஆம் திகதி பிணையில் விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு

- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane, Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உறுதியான தடுப்பே மாற்றாகும்

இன்றைய உலகம் சுற்றுச்சூழலைக் கடுமையாக பாதிக்கும் ஒரு அபாயத்தில் தத்தளிக்கிறது. அதன் முக்கியமான காரணிகளில் ஒன்று பிளாஸ்டிக். இந்தப் பிளாஸ்டிக் பயன்பாடு ஒவ்வொரு நாடிலும் அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அது இயற்கையின் நெஞ்சை நெரிக்கும் நிலைமை உருவாகியுள்ளது. இலங்கையிலும் இதே சூழ்நிலை உள்ளது. தவிர்க்க முடியாத அளவிற்கு பிளாஸ்டிக் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதோடு, அதன் அழிவுகளும் கவலையை உருவாக்குகின்றன.

இலங்கையில் தினசரி உற்பத்தி செய்யப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் சுமார் 700 மெட்ரிக் தொன் எனப் நாடாளுமன்ற ஆவணங்கள் தெரிவிக்கின்றன. இதில் பெரும்பகுதியானவை ஒருமுறையே பயன்படுத்தும் பிளாஸ்டிக் (விஷ்ஜஆயிள–ற்விள ஸ்ரீயிழிவிமிஷ்உ) வகைகளாக இருக்கின்றன. உணவு பொதிகள், பைகளைச் சுற்றும் மூடிய்கள், பாட்டில்கள் மற்றும் கழிவறைப் பைகளை உள்ளடக்கிய இவை, நமது நீர்த்தொட்டிகள், கடற்பரப்புகள், நிலத்தடி நீர் மற்றும் வனவிலங்குகளுக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றன. பறவைகள் மற்றும் கடல்வாழ் உயிரிகள் பிளாஸ்டிக் விழுங்குவதால் உயிரிழக்கின்றன என்பது வருத்தமளிக்கும் உண்மை.

இவ்வாறான சூழ்நிலையில், பிளாஸ்டிக் பயன்பாட்டை கட்டுப்படுத்த உறுதியான சட்டங்கள் மட்டுமின்றி, நடைமுறைப்படுத்தும் வினைத்திறனும் மிக அவசியம். கடந்த காலங்களில் இலங்கை அரசு சில வகையான பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதித்திருந்தாலும், அவை பல இடங்களில் கடைப்பிடிக்கப்படவில்லை. குறிப்பாக நகராட்சிகள் மற்றும் உள்ளூராட்சி நிர்வாகங்கள் தங்களுக்குக் கீழுள்ள பகுதிகளில் பிளாஸ்டிக் தடைச் சட்டங்களை முழுமையாக அமல்படுத்தத் தவறிவிட்டுள்ளன.

இனி என்ன செய்ய வேண்டும்?

முதன்மையாக, அரசு மீண்டும் ஒரு திட்டமிட்ட தேசிய நடவடிக்கை அமுல்படுத்த வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் பிளாஸ்டிக் ஒழிப்பு வாரம் நடத்தப்பட வேண்டும். பள்ளிகள், அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் அனைத்தும் பிளாஸ்டிக்கற்ற தினம், வாரம், மாதம் போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் பங்கேற்கச் செய்யப்பட வேண்டும். அதே சமயம், மாற்று பொருட்கள்– துணிப் பைகள், காகிதப் பொதிகள், கைக்கடிகார பாட்டில்கள் போன்றவற்றுக்கான அளவீட்டுசார் சலுகைகள் வழங்கப்பட வேண்டும்.

இதைவிட முக்கியமானது, பிளாஸ்டிக் உற்பத்தியாளர்களுக்கும் நிதி மற்றும் விதிப்பூர்வ கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும். ஒரு வகையான "போக்குவரத்து வரி" போன்று, பிளாஸ்டிக் உற்பத்திக்கு சிறப்பு வரி விதிக்கப்பட வேண்டும். அந்த வரியிலிருந்து பெறப்படும் வருவாய், பசுமை திட்டங்கள் மற்றும் மறு செயலாக்க நிலையங்களுக்கு செலவிடப்பட வேண்டும்.

மூன்றாவது, ஊடகங்கள் மற்றும் சமூகவலைதளங்களின் வழியாக விரிவான சமூக விழிப்புணர்வு இயக்கங்கள் நடைபெற வேண்டும். மக்கள் உணர்வில் மாற்றம் ஏற்படாமல் எந்தவிதமான சட்டங்களும் முழுமையாக செயல்பட முடியாது என்பதை நம்மால் புரிந்து கொள்ளவேண்டும்.

இவ்வாறு, பிளாஸ்டிக் பாவனைக்கு எதிரான போராட்டம் ஒரு அரசியல் நாடகம் அல்ல, இது நம் தலைமுறைகளின் எதிர்காலம் சார்ந்ததொரு தீவிரமான பிரச்சினை. அதற்கான தீர்வும் அதே அளவிற்கு தீவிரமாக, திட்டமிட்டதாய் அமைய வேண்டியது காலத்தின் கட்டாயமாகிறது. பிளாஸ்டிக் இல்லாத எதிர்காலம் என்பது ஒரு கனவாக அல்ல, நம்மால் செயல்படுத்தக்கூடிய சாத்தியமாக அமைய வேண்டும்.

# அமெரிக்க விதித்துற்ற வரி சந்தையில் நாட்டின் போட்டித் திறனைப் பாதிக்கும்

## ஆடைச் சங்கங்களின் மன்றம் அறிக்கை

30 சதவீத பரஸ்பர தீர்வை வரி இலங்கையின் போட்டித் திறனை கடுமையாகப் பாதிக்கக்கூடும் ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றம் அமெரிக்காவின் 30 சதவீத பரஸ்பர தீர்வை வரி அறிவிப்பானது இலங்கையின் ஆடைத் தொழில்துறையில் கணிசமான கவலையை ஏற்படுத்தியுள்ளது. இந்த வரி உயர்வு பிராந்திய போட்டியாளர்களுடன் ஒப்பிடும்போது இலங்கையின் போட்டித்திறனை கடுமையாக பாதிக்கக்கூடும் என ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஓகஸ்ட் முதல் அமலுக்கு வரவுள்ள அமெரிக்காவின் 30 சதவீத பரஸ்பர தீர்வை வரி அறிவிப்பானது இலங்கையின் ஆடைத் தொழில்துறையில் கணிசமான கவலையை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் மிகப்பெரிய ஏற்றுமதி வருவாய் ஈட்டுபவர்களில் ஒன்றான இத்துறை அமெரிக்க சந்தையை பெரிதும் நம்பியுள்ளது. மேலும், இந்த வரி உயர்வு பிராந்திய போட்டியாளர்களுடன் ஒப்பிடும் போது இலங்கையின் போட்டித்திறனை கடுமையாகப் பாதிக்கக்கூடும்.

வியட்நாம் ஏற்கனவே ஒப்பந்த பேச்சுக்களை நிறைவுசெய்து தற்போது 20 சதவீத தீர்வை வரிக்கு உட்பட்டுள்ளது. பங்காளதேஷ் 35 சதவீத வரி விதிப்பை எதிர்கொண்டாலும், அமெரிக்காவுடன் வரிக்குறைப்பு பேச்சுக்களை ஆரம்பித்துவிட்டது. இந்தியா இன்னும் பேச்சுநடத்தி வருகிறது. எனினும் ஆரம்பகட்ட தகவல்கள் இலங்கையைவிட அதற்குச் சாதகமான வரி விகிதம் கிடைக்கலாம் என்பதை சுட்டிக்காட்டுகின்றன. இலங்கையைவிட சற்று அதிகமான வரி விகிதம் கொண்ட கம்போடியாவும் வரிக்குறைப்புக்கான பேச்சுக்களை நடத்த வாய்ப்புள்ளது.

30 சதவீத வரி தொடர்ந்தால், அமெரிக்க நிறுவனங்கள் குறைந்த வரிவிகிதம் கொண்ட நாடுகளை நாட ஆரம்பித்து விடுவர். எனவே, இலங்கைக்கு சாதகமான ஒப்பந்தம் கிடைப்பதை உறுதி செய்ய, அமெரிக்க வர்த்தக பிரதிநிதியுடன் தொடர்ந்து பேச்சு நடத்த ஆளும்தரப்பை வலியுறுத்துகின்றோம்.

44 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாக வரி வீதம் குறைக்கப்பட்டிருப்பது, இலங்கை மற்றும் அமெரிக்க வர்த்தக பிரதிநிதி இடையேயான கலந்துரையாடல்கள் நேர்மையான முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்பதை அங்கீகரிக்கும் ஒரு அறிகுறியாகும். 2025 ஓகஸ்ட் முதலாம் திகதி காலக்கெடுவுக்கு முன் ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றம் கோரிக்கை உடன் பேச்சுவார்த்தைகள் மிக விரைவில் தொடரும் என அரசாங்கம் தெரிவித்ததில் மகிழ்ச்சியடைகின்றோம். வேலைவாய்ப்புகளைப் பாதுகாக்கவும், சந்தைப் பங்கை நிலைநிறுத்தவும், உலக ஆடை விநியோக சங்கிலிகளில் இலங்கையின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தவும் இராஜதந்திர தீர்வு அத்தியாவசியமானது.

# மத்தள விமான நிலையத்தினது செயற்பாட்டை மேம்படுத்த திட்டம்

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

மத்தள சர்வதேச விமான நிலையம் 260 மில்லியன் டொலர் கடனைக் கொண்டிருக்கிறது. 2030ஆம் ஆண்டு வரை இந்தக் கடனை செலுத்த வேண்டியுள்ளது. நாட்டில் மாற்று விமான நிலையமொன்று அத்தியாவசியமானது என்பதால் அதன் செயற்பாடுகளை முற்றாக நிறுத்த முடியாது. இந்த விமான நிலையத்தின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான திட்டமிடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை (09) மத்தள சர்வதேசவிமானநிலையத்துக்குகண்காணிப்பு விஜயம் மேற்கொண்டிருந்த போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வர்த்தக திட்டமிடலொன்று இன்றியே மத்தள விமான நிலையம் நிர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக பாரிய கடன் ஏற்பட்டுள்ளது. சுமார் 260 மில்லியன் டொலர் கடனை எதிர்வரும் 2030ஆம் ஆண்டு வரை செலுத்த வேண்டியுள்ளது.

எனவே மத்தள விமான நிலையத்தில் விமான போக்குவரத்தை அதிகரிப்பதற்கான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றோம். எனினும் ஓரிரு ஆண்டுகளில் எம்மால் அந்த இலக்கை அடைய முடியாது. இந்த விமான நிலையத்தால் கடன் மாத்திரமின்றி பாரிய செலவும் காணப்படுகிறது.

எவ்வாறிருப்பினும் அதன் செயற்பாடுகளை முற்றாக நிறுத்த முடியாது. காரணம் நாட்டில் மாற்று விமான நிலையமொன்று அத்தியாவசியமானதாகும். விமானங்களை கொள்வனவு செய்வதற்கு சிறந்த முதலீட்டாளர்களை வரவழைக்க வேண்டியுள்ளது.

எம்மால் அதனை செய்ய முடியாது. எவ்வாறிருப்பினும் விமானங்கள் பழுது பார்த்தல், அவற்றை புதுப்பித்தல் போன்ற செயற்பாடுகளை இங்கு முன்னெடுக்க முடியுமா என்பது தொடர்பில் அவதானம் செலுத்தியிருக்கின்றோம்.

அழகான சுற்றுச்சூழலில் இந்த விமான நிலையம் அமைந்துள்ளது. இவ்வாறான சாதகமான காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அதனை பயன்பாட்டுக்குரியதாக மாற்றுவதற்கான வேலைத்திட்டங்களும் காணப்படுகின்றன.

பயணிகளை வரவழைப்பதற்கான வேலைத்திட்டத்துக்குச் செல்வதற்கு முன்னர் இவ்வாறான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கின்றோம். கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாகக் கிடைக்கும் வருமானம் இங்கு வீணாக செலவிடப்படுகிறது.

அதேவேளை இங்குள்ள அதிகாரிகள் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் குறித்தும் சிந்திக்க வேண்டியுள்ளது. எனவே தான் ஏனைய விமான நிலைய செயற்பாடு;களை ஊக்குவிப்பது குறித்து அவதானம் செலுத்தியுள்ளோம் என்றார்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்












## அமெரிக்காவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்க பிரதிநிதிகளுடன் தொடர்ந்து பேச்சு நடத்தவுள்ளோம். இது பூகோள நெருக்கடி என்பதை எதிர்க்கட்சியினர் விளங்கிக் கொள்ள வேண்டும் என்று பொருளாதார திட்டமிடல் பிரதி அமைச்சரும், தொழில் அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின்போது அமெரிக்காவினால் விதிக்கப்பட்ட 30 சதவீத பரஸ்பர தீர்வை வரி தொடர்பில் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்காவின் புதிய அரசுத் தலைவர் டொனால்ட் ட்ரம்ப் கடந்த ஏப்ரல் மாதம் 02 ஆம் திகதி உலக நாடுகளுக்கு செல்வாக்கு செலுத்தும் வகையில் புதிய பரஸ்பர தீர்வை வரியை விதித்தார். இலங்கைக்கு 44 சதவீத பரஸ்பர தீர்வை வரி விதிக்கப்பட்டது. இந்த வரி தொடர்பில் ஆராய்வதற்கு அன்றைய தினமே அரசுத் தலைவர் விசேட குழுவை நியமித்தார்.

புதிய பரஸ்பர வரி தொடர்பில் அமெரிக்காவின் பிரதிநிதிகளுடன் முதல் கட்டமாக நிகழ்நிலை முறைமை ஊடாக கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து இலங்கையின் பிரதிநிதிகள் இரண்டு முறை அமெரிக்காவுக்கு சென்று அந்நாட்டின் வர்த்தகத்துறை பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்கான ஏற்றுமதிகள் 3 பில்லியன் டொலர்களாக காணப்படுகின்ற நிலையில் இறக்குமதிகள் 300 மில்லியன் டொலர்களாக காணப்படுகிறது. இவ்வாறான நிலையில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கான பற்றாக்குறை 88 சதவீதமாக காணப்பட்ட நிலையில் முதல்கட்டமாக 44 சதவீத தீர்வை வரி விதிக்கப்பட்டது.

44 சதவீத தீர்வை வரி பற்றி அமெரிக்காவுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைக்கு அமைவாக இரண்டாம் கட்டமாக இலங்கைக்கு 30 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது. ஆசிய வலய நாடுகளில் இலங்கைக்கு அதிகளவிலான வரி சலுகை வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவுடனான இருதரப்பு ஒப்பந்தம் எதிர்வரும் ஆகஸ்ட் முதலாம் திகதிக்குள் கைச்சாத்திடப்படாவிடின் இரண்டாம் கட்டமாக அறிவிக்கப்பட்ட 30 சதவீத தீர்வை வரி அமுல்படுத்தப்படும். ஆகவே 30 சதவீத தீர்வை வரி வீதத்தை குறைத்துக் கொள்வதற்கு அமெரிக்க பிரதிநிதிகளுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம்.

தொலைபேசி மற்றும் விருந்துபசாரத்தின் ஊடாக வரியை குறைக்குமாறு அமெரிக்காவுக்கு எம்மால் குறிப்பிட முடியாது, ஆகவே தற்போதைய பூகோள நிலைமை கருத்திற் கொண்டு எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டுக்களை முன்வைக்க வேண்டும் என்றார்.

## தெற்காசியாவில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டிணைவின் (ஆசியான்) அமைச்சர் மட்ட நிகழ்வுகளின் ஓரங்கமாக வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத்துக்கும் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் செர்கே லவ்ரோவுக்கும் இடையிலான சந்திப்பு வியாழக்கிழமை (10) நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது இலங்கை - ரஷ்ய நல்லுறவில் அழுத்தங்களைத் தோற்றுவித்திருக்கும் விடயங்கள் மற்றும் சர்வதேச அரங்கில் இருநாடுகளும் ஒருங்கிணைந்து செயற்படுவதற்கான சாத்தியப்பாடுகள் என்பன தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது கருத்து வெளியிட்ட ரஷ்ய வெளிவிவகார அமைச்சர், பிரிக்ஸ் அமைப்பில் இணைவதற்கான விருப்பத்தை வெளிப்படுத்தி கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் இலங்கையினால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் தொடர்பில் தனது நன்றியை வெளிப்படுத்தினார். இது வரவேற்கத்தக்க நகர்வு எனவும், இந்த விடயத்தில் இலங்கைக்கு முழுமையான ஆதரவை வழங்குவதற்கு ரஷ்யா தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேபோன்று தெற்காசியப்பிராந்தியத்தில் ரஷ்யாவின் நம்பத்தகுந்த பங்காளி நாடாக இலங்கை திகழ்வதாகக் குறிப்பிட்ட அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர், இருநாடுகளுக்கும் இடையிலான வரலாற்று ரீதியான நேர்மறைத் தொடர்புகளை நினைவுகூர்ந்ததுடன் எதிர்காலக் கூட்டிணைவுக்கு ஏதுவான வகையில் அதனை மேலும் வலுப்படுத்துவதற்கான தமது விருப்பத்தை வெளிப்படுத்தினார்.

அவரைத்தொடர்ந்து கருத்து வெளியிட்ட அமைச்சர் விஜித்த ஹேரத், குறிப்பாக பொருளாதார நெருக்கடியின்போதும் ஏனைய சந்தர்ப்பங்களிலும் இலங்கைக்கு ரஷ்யா அளித்துவரும் தொடர் ஆதரவுக்கும், நீண்டகாலமாகப் பேணிவரும் வலுவான நட்புறவுக்கும் நன்றி தெரிவித்தார்.

அத்தோடு இருநாடுகளுக்கும் இடையிலான உறவை ஆழமான பல்துறைசார் ஒத்துழைப்பின் ஊடாக மேலும் உறுதிப்படுத்துவதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் உறுதியளித்தார்.

## வவுனியா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரைத் தாக்கிக் கொன்றுவிட்டனர் என்றும் தகவல்கள் பரவியதை அடுத்து கொந்தளித்த பொதுமக்கள் பொலிஸாருடன் முரண்படத் தொடங்கியதனால் இந்தப் பதற்றம் ஏற்பட்டது.

சம்பவ இடத்தில் காணப்பட்ட பொலிஸாரின் பெயர்ப் பட்டியில் பண்டார என்ற பெயர் காணப்பட்டது. இதனால் இந்த உயிரிழப்புக்கும் பொலிஸாரே காரணம் என்று குழப்பத்தில் ஈடுபட்டவர்கள் நம்பினர். அவர்கள் அந்தப் பொலிஸ் நபர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அங்கு விசாரணைக்காக வந்த ஏனைய பொலிஸாருடன் முரண்படத் தொடங்கினர்.

இந்த பதற்றமான சூழலைக் கட்டுப்படுத்த மேலதிகப் பொலிஸார் அந்த இடத்திற்கு வரவழைக்கப்பட்டுக் குவிக்கப்பட்டனர். இதனால் பதற்றம் மேலும் அதிகரித்தது. பின்னர் ஓரளவிற்குக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

உயிரிழந்தவர் யார் என்பது தொடர்பிலும் அவரது இறப்பு எப்படி நிகழ்ந்தது என்பது தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## அயலுறவுத்துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தினோம்

மலேசியாவில் உள்ள பல்வேறு துறைகளில் இலங்கைத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகளை நாங்கள் ஆராய்ந்தோம்.

மலேசியப் பிரதமரின் உத்தரவின் பேரில், இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தொடர்பான அனைத்து அம்சங்களையும் விவாதித்து நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளை வகுப்பதற்காக உள்துறை செயலாளர் நாயகத்துடன் ஒரு தொடர்ச்சியான அதிகாரிகள் மட்டக் கூட்டம் திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

## மனதை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

இதன் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தை ,தாய்,மகன் மற்றும் மகள் ஆகிய நான்கு பேரும் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்க பட்டனர்.

எனினும் பலத்த காயங்களுக்கு உள்ளான 4 வயதுடைய சிறுவன் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

மேலும் பலத்த காயமடைந்த தந்தை,தாய் மற்றும் 12 வயதுடைய சிறுமி ஆகிய மூவரும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் குறித்த 12 வயதுடைய சிறுமி மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் குறித்த 4 வயதுடைய சிறுவன் உயிரிழந்த சம்பவம் தந்தைக்கு தெரியாத நிலையில் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை(11) மகன் இறந்த செய்தியை தந்தையிடம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் பலத்த காயங்களுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்றுவரும் தந்தை எழுந்து நடக்க முடியாத நிலையில் தனது நான்கு வயதுடைய மகனுக்கு வைத்தியசாலையில் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தியுள்ளார்.

குறித்த புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகி உள்ளது.

உயிரிழந்த சிறுவனின் சடலம் இறுதிக் கிரியைகளுக்காக உறவினர்களிடம் கையளிக்கும் முன்னர் வைத்திய சாலையில் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றுவரும் தந்தைக்கு காண்பிக்கப்பட்ட நிலையில்,தனது மகளின் உடலை தடவி தந்தை அஞ்சலி செலுத்தினார்.

குறித்த புகைப்படம் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.07.2025இல் வெளியிடப்பெற்றது